(7) அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஈ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு சட்ட நுணுக்க உதவி, ஆலோசனை வழங்குதல் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 13/73).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, சட்ட நுணுக்க உதவி, ஆலோசனை வழங்குதல் சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 13/73) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள் வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவை அளித்துள்ளார்கள்

மாண்புமிகு தொழில் துறை அமைச்சரவர்கள் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

DR. H. V. HANDE : On a point of Order, Sir, * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன வார்த்தைகளைப் பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். இதுமாதிரி பேசுவது முறையல்ல.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அவர்களையெல்லாம் விட்டீர்கள் இது முக்கியமான பிரச்னே. அதனல் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது கூட பிரிவிலேஜ் ஆகும். This will come under privilege.

(டாக்டர் எச். வி. ஹாண்டே நின்ருர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள், தயவு செய்து உட்காருங்கள்.

(திரு. துரைமுருகன் நின்ருர்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : துரைமுருகன் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு மட்டும் இந்த உரிமை இருக்கட்டும். டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு கட்சியின் தலைவர். நான் இங்கே பேரவையின் தலைமைப் பொறுப்பில் இருந்தபோதிலும் கூட, என்னுடைய நடுநிலைமை

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பட்டது.

1973 ஏப்ரல் 5] [பேரவைத் துணைத் தலைவர்]

தவறுமல் பேச வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். **நீங்கள்** *மூதறிஞர் ராஜாஜி அவர்களின் கட்சியைச் சார்ந்தவர்கள். மேலவை உறுப்பினராக இருந்தவர்கள். பேரவைத் தலைவரின் தீர்ப்பைப்பற்றி இவ்வளவு கடுமையாக விமர்சனம் செய்வீர்கள் என்று நினைக்கவில்லை. நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அந்த வார்த்தைகளை நீக்கிவிட்டதால், அது குறித்து நான் மேலும் விமர்சிக்க விரும்பவில்லை. இருந்தபோதிலும் என்னுடைய மன வருத்தத்தை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். (குறுக்கீடு)* (Dr. H. V. Hande rose). (Dr. Hande, you kindly resume your seat. Do not drive me to a remote corner. Kindly resume your seat. You are continuously disobeyinf the Chair. *இது ஒரு நல்ல ஜனநாயக முறையாகாது. என்னிடம் பெரிய சக்தி ஒன்றும் கிடையாது.*

திரு. துரைமுருகன் : *தலைவரவர்களே, என்னைப்போன்ற இளம் சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள விரும்புவது எல்லாம், என்ன வேண்டுமானாலும் பேசிவிடலாம், தலைவர் ஆணைக்குக் கீழ்படியாமல் இருக்கலாம், அதற்குப் பரிகாரம், அப்படிப் பேசியவைகளைச் சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கிவிடுவதுதானா?*

(டாக்டர் ஹாண்டே எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : *டாக்டர் ஹாண்டே அவர்களை நான் பேச அனுமதிக்கவில்லை. நீங்கள் பேசுவீர்கள், அதற்குப் பிறகு ஒரு உறுப்பினர் விளக்கம் கேட்பது, இவ்வாறாக ½ மணி நேரம் ஆகிவிடும். (குறுக்கீடு) நான் டாக்டர் ஹாண்டே அவர்களைப் பேச அனுமதிக்கத் தயாராக இல்லை. நீங்கள் பேரவைத் தலைவரை மதிப்பது இல்லை, பேரவையின் சட்ட திட்டங்களை மதிப்பது இல்லை என்று சொல்கிறபோது, இங்கே பேச அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) 'பர்சனல் எக்ஸ்பிள னேஷன்' கொடுக்க அனுமதிக்க முடியாது. 'பர்சனல் எக்ஸ் பிளனேஷன்' கொடுப்பதற்கு சட்ட விதிகளில் முறைகள் இருக்கின்றன. பேரவைத் தலைவரின் ஆணையை மதிக்க வேண்டு மென்று இருக்கிறது. அந்த விதிமுறைகளை நீங்கள் மதிக்கவில்லை யாதலால், 'பர்சனல் எக்ஸ்பிளனேஷன்' கொடுக்க அனுமதி மறுக்கிறேன்.*